Minutes of the **Public Hearing** conducted on **03.09.2024** at 11.00 A.M. at M/s. Maria Mahal, Muthiahpuram, Thoothukudi District, for the proposed **Development of Berths I to IV (Outer) as Container Terminals Including Dredging and Construction of Breakwater at VOC Port on DBFOT Basis, Mullakadu Village, Thoothukudi Taluk, Thoothukudi District.**

**The following Panel Members were present:**

| | | |
|---|---|---|
| 1. | Thiru. C. Ajay Seenivasan | District Revenue Officer,<br>Thoothukudi District. |
| 2. | Er. S.V. Kalaivani | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Thoothukudi. |
| 3. | Project Proponents and their representatives and the public | As per Attendance Register<br>(A copy of the Attendance Register is attached in Annexure - II). |

At the outset, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Thoothukudi welcomed the esteemed District Revenue Officer, Thoothukudi District who was present to preside over the public hearing meeting and also welcomed the project proponent and their representatives and all the public who were present to attend the public hearing meeting and explained the purpose of the meeting and also about the project. The details about the project, Environmental Management Plan and the mitigation measures to prevent the pollution related issues were explained on behalf of the Proponent by the Technical expert of the project. After this, the public expressed their views.

**I. Following are the views expressed by the public during the Public Hearing meeting:**

**1.Thiru. S.M. Santhanaraj, District In-charge, Tamil Vidiyal Party, Muthiyapuram, Thoothukudi:**

1. I would like to know the names of the officials who attended here.
2. I doubt whether this public hearing is for the public or for port contractors and officials. Please clarify this.
3. I am an ordinary person. My house is in this area. I am a social activist. I am also an Indian citizen. I also pay taxes.

4. I am not aware of the public hearing taking place here.
5. Based on the information received now, I am directly coming from Thoothukudi.
6. The Hon'ble District Revenue Officer should clarify whether the people were informed about this public hearing?
7. Is this a development plan for the port? Or developmental plan for people through the port. The date and venue of this public hearing was not published in newspapers, not even on Facebook pages and Whatsapp. Did you inform people about this public hearing today? Or have you given any notice? You are an officer so please give us a proper explanation.
8. No auto ads are given in Muthaiahpuram area where I am living. Therefore Pollution Control Board has not done their duty properly and the same is the opinion of Mr. Rommelt.
9. Coastal areas are more affected due to these kind of projects. Fishermen have repeatedly informed the District Collector about the pollution of the beach due to the SagarMala Project, but no proper information has been given about it.
10. This public hearing is happening in Muthaiahpuram whereas, none of the public from this area participated here because no advertisements were made in this area and no notice boards were kept.
11. The District Collector and the District Revenue Officer did not approach the people properly which led to the issues like Sterlite.
12. A 21-year-old youth died due to ammonia gas leak in M/s. TAC Limited, his family is struggling because the Pollution Control Board is not monitoring the factories properly.
13. A large amount of smoke is being emitted out of M/s. SPIC Industry. Ammonia gas is getting released after 1.30 pm. If the villagers talk to the company about this, they say that if you want, leave the villages. Especially the people of Susainagar, Thangammalpuram and Shanmugapuram have approached the company for which the PRO, Manager stated that the smoke will emit like that only. From this, the pollution control of industries is evident.

14. If the Pollution Control Board would have done their duties properly, a 21-year-old man would never have died from an ammonia gas leak in M/s. TAC Limited, we cannot compensate the loss by giving money, no justice. If we give Rs. 25 lakhs to the family of the deceased, the problems will not end, we will even beg for that money and will give for that family.
15. The Pollution Control Board has not approached properly from the Sterlite issue till date due to which only 13 lives have been spared.
16. Similarly, 30 people were affected by the ammonia gas leak from M/s. Nila Sea foods and 40 people were affected by Coromandel in Chennai.
17. I request the officials present here not to misunderstand. If the port does not conduct this public hearing to receive views and opinions from the public, I request them to conduct this public hearing in Port Trust.
18. I have previously worked as a supervisor in the same port. I was fired by the port on the third day from a temporary job since I questioned the issues in the 110 crore project brought by the port through the Pollution Control Board.
19. The common man's voice could not be reflected anywhere. I am not currently on that job.
20. It is our democratic rights to ask questions and the authorities must answer them. We want to live.
21. We do not want any project that affects the fishermen. Schemes are brought by the government for people to live, no scheme is needed for people to die.
22. The Port benefits traders and workers but we welcome projects that are environmentally friendly, otherwise the issues happened for Sterlite will happen for every project.
23. What is certain that the problem that happened in M/s. TAC Limited will not happen tomorrow in M/s. SPIC? Officials should clarify this.
24. I consider this to be a meeting to listen to the port's views about this project and not a Public Hearing Meeting. Thank you

**<u>District Revenue Officer</u>**:

Information has been published in the newspaper on 23.07.2024 that Public hearing will be held on 03.09.2024 and said that copy of the same will be given. Also, the District Environmental Engineer said that pamphlets were distributed and

auto advertisements have been made about this public hearing. This is a public hearing and this many peoples gathered here, so I request you to express your views. Also Chief Engineer, V.O. Chidambaranar Port Authority is requested to explain about the advertisements made.

**Chief Engineer, V.O.Chidambaranar Port Trust:**

About this Public hearing we have given advertisements on 23.07.2024 in Daily Thanthi newspaper that consultation meeting is going to be held on 03.09.2024. We have placed Advertisement board in several places, distributed notices and Auto ads were given in many places.

**2.Thiru. Mr.Rommelt, Poopalarayapuram, Koromandalam Executive Committee Member:**

1. Auto advertisements not given in our area.
2. Almost 99 percent of the fishermen's population living in Boopalarayarpuram, Threspuram and Inigo Nagar But no advertisements are made in these areas.
3. It is the fishermen who are affected by this project, but you are accounting for it by advertising in other places without doing any advertisements on behalf of the port in the area where the fishermen live. In this regard, the District Revenue Officer and the District Environmental Engineer sitting in dias should answer for this.
4. Because only fishermen need to know about this project, any project developed in the sea will affect the fishermen at the first.
5. This is already the case in the Sterlite issue during which the fishermen were affected to a large extent due to which, the lot of fishermen participated in the protest. We lost 13 lives. People living here have shed blood during that issue. You have come up with this kind of project blindly.

**3.Thiru. Sivaganesan, Shanmugapuram, Thoothukudi:**

1. I am from Shanmugapuram, Thoothukudi. Auto ads and notices were distributed in our area. I found it.

**4.Thiru. Mr.Selvakumar, General Secretary, Thoothukudi Coromandalam Community Welfare Association**

1. Our welfare organization involved in the upliftment of coastal people including their education and employment.

2. In any developmental projects, there will be set of people who will lose their livelihood.
3. Due to this project, the coastal people, especially those who are engaged in country boat, thoni traditional fishing will be affected. Even though, there are objections for this project, considering the progress of the country, people and trade with other countries, we have to do it definitely. Also, the people who will benefit from this scheme includes the livelihood of the working employees and pensioners of the port. Therefore, we have decided to welcome this project with certain conditions. The condition is that the international companies, MNCs and Corporate Companies which are about to participate in this project has opposed that the estimated cost of the project is too low. The estimate of the project is Rs.8,500 crore and at the completion of the project it may cost Rs. 13,000 crore. Therefore, the difference in cost will be provided by Central Government through Viability Gap Funding (VGA) for the company implementing this project. The MNC companies which benefits through VGA should give compensation for the people on Coastal area who are involved in thoni, country boat and traditional fishing industry by giving 50% of the VGF should be spent as CSR fund for the development of coastal people losing their livelihood. According, 50% VGF compensation fund should be created as corpus fund snd should be utilized for the development of coastal people. With the above condition, we welcome this project.

**5.<u>Thiru. Mr. A. Mariyappan, Tsunami Colony Fishermen's Alliance Leader:</u>**

1. The Chief Engineer said that there was no sea erosion.
2. The stones placed 4 or 5 years ago have been washed away due to the sea erosion. No stones present between Water tank and Mullakkadu.
3. If this continues, the beach will disappear in 10 or 20 years.
4. Therefore, necessary preventive measures should be taken for the fishermen living in the area and for the fishing community.
5. Furthermore, it is necessary to provide information about the disposal of materials such as stone and soil dredged from the sea during the excavation.
6. Already, the coral reefs are destroyed due to these kind of project. Further, it is affecting marine resources and fishing community.

7. Earlier, the fishing nets were severely damaged due to dumping of stones and muds dredged from the sea.
8. Dumping of dredged material will affect the coral reefs and sea resources.

**Chief Engineer, V.O. Chidambaranar Port Trust:**

1. The dredged materials like stones and sand will not be disposed into sea and will be utilized within the port.
2. Further, a study had been conducted on the erosion in the areas and the report states that there will be no major impact of sea erosion due to this project.
3. The study has been conducted and it states that there will be no erosion. Fishermen setting nets in shipping lanes causes' damage. Also the Port is informed in advance of the dredging of shipping lanes in the further, we will give advance information notice of dredging the shipping lanes. So don't have any fear.
4. The damaged material will be routed through pipelines and the same will be used to reclaim land for construction on berths. Hence, the dredged materials won't be dumped in sea.

**6.Thiru. Mr.Rommelt, Poopalarayapuram, Coromandalam Executive Committee Member:**

1. It is regrettable that no brochure has been given with the detail of the project
2. This public hearing will be completed and will pass on as it is. We will not be aware of follow up action. Therefore, at least 1000 copies of brochures with details of project like in and outs, Pros and Cons should have been distributed which will make the common man to understand about the project. Further, a fellow friend said that announcements have been made to Shanmugapuram but that area is inhabited by very few fishermen. Information on this Public hearing was not given to densely populated fisherman village and publishing news about it in the todays newspaper should be considered very important. If there is any accident whom to be contacted, the details of phone numbers, E-mail id also not available. Communication boards should be placed by the port in case of any impacts to the fishermen. E-mail address should be provided for feedback of fishermen. I record with great regret that even these minimum facilities are

not provided on behalf of the port. Hence, safety should be given top priority by the Port Authorities.

3. The port authorities should make this happen at least in the coming times.
4. As Mr. S.M. Santhanaraj said, if we give Rs.25 lakhs to the family of the deceased, the problems will not end that we will even collect the money by begging beg for the money, so I request you to provide safety provisions and facilities.
5. It is stated that this project will create employment but clarify how many permanent employees are there in the port. There are less than 200 workers at most.
6. 20 years ago, there were 2000 permanent employees in port trust. Now, there are not even 300 employees.
7. Creating Employment is correct but the same should be should be created without affecting fishing community.
8. Monitoring cell, grievance cell should be created and the notice boards along with emergency contact details should be placed in coastal areas like Threspuram, Inigonagar, Lurthammalpuram, Mettupatti, Alangarathattu, etc.,

7. **Thiru. Mr. Suresh , CITU, Thoothukudi:**

1. The Chief Engineer has explained well. However, as the individual who spoke before me stated how many permanent employees are there, regardless of the progress that has been made? Our growth is not alone based on growth of Industry but also includes growth of employess. Hence, Employment opportunity should be given on permanent basis and we are not supporting contract based employment.
2. There are many educated youth in this area and they should get permanent employment.
3. This project shall be implemented without affecting the environment.
4. This project should not affect the fishermen living in Soosai Nagar, Tsunami Colony, Threspuram, Alangarathattu etc .,
5. This project shall be implemented along with Sethusamudram project. This will be help in connecting the ports in East Coast.

6. We support this project with these conditions.

**8.Thiru. Sivaganesan, Shanmugapuram, Thoothukudi:**

1. The port itself was initially established with a opposition.
2. There are hundreds of fishing boats in the harbor today, but there were only around ten boats on that particular day.
3. Therefore, the project should be established without affecting the livelihood of fishermen.
4. Safety is very much important and shall be ensured in this project.

**9.Thiru. Jeyanth, Muthiahpuram:**

1. I am working in a private shipping company for the last 26 years and living in Muthiahpuram area.
2. This outer harbor project is proposed to handle containers.
3. Nowadays, ships started using sulfur fuel as a green initiative and also, these cargos will not cause any dust emission since all the 4 berths proposed are going to handle containers.
4. over the past 26 years the port has created 1000 employments.
5. Employment generation is not only in the corporate sector, many small industries including shipping agents, cargo handling agents, customs broker agents, container terminals, repair works, empty container yards, surveyors stuffing and de-stuffing operations, truck drivers, fumigation activities and repair workers. This leads to employment of 10,000 people directly and indirectly.
6. People who are trained at Thoothukudi container terminals are now working in the middle east and Dubai, because of the valuable training provided by these terminals.
7. Thoothukudi youths employed as ship Captain and Chief Engineers international has obtained reputation and found renowned. Thoothukudi port has a maximum draft of 14.2 m, however, Vizhinjam Port, which is 200 km away from us, is having a draft of 18 m. Even One meter draft variation will lead to handling of additional 2000 to 3000 cargos. Accordingly, the industries and its employment depending on this cargo will get affected. The current export contribution of 20000 containers per month will go down.

8. This outer port project will increase container handling capacity by 5 times. One meter draft increase will raise the standard of living of 1000 families in the organized and unorganized sector.

9. In my company, we had only 15 to 20 employees in the year 2000 and now we have 80 to 90 employees because of the industrial development of Tuticorin happened due to port. Comparison of the infrastructure available in Indian ports with Colombo port, 20 years ago our port draft was 11m and Colombo port's draft was 14m.

10. Now their draft is 18 m and ours is only 14. Further, Colombo is planning to increase their draft to 21 meters. However, we are struggling to increase the draft to 16 meters. Further, the government's Maritime India Vision 2030 states that all the 12 major ports should create a bare minimum draft of 16.5m.

11. Unfortunately, the present inner harbor does not have the capacity to increase the draft more than 14.5 meters. That is why we are moving to the present outer harbor project.

12. The companies in and around Tuticorin are approaching colleges in Tuticorin for recruitment to their companies. Many cleaner industries have shown interest in Thoothukudi due to other infrastructure such as port, airport, rail connectivity etc.

13. We are already 20 years late.

**10. Thiru. Lino, Vice-President, Tuticorin District Tiny and Small Scale Industries Association (THUDITSSIA):**

1. Our organization THUDITSSIA is 33 years old organization which supports and encourages micro and small industries of Tuticorin.
2. We welcome this project.
3. There is no development without port. The Industrial development happened in Thoothukudi because of Port. We extend our support to the proposed outer harbor project.
4. Further, the safety of fisherman community which includes fisherman pathways and fishery resources shall be ensured.
5. It is requested to ensure that more employment and contracts are given to people from Thoothukudi.

**11. Thiru. Samsuddin, Thoothukudi Islamic Organization:**

1. The majority of the industries in Thoothukudi including Central and State Government organizations, do not provide employment opportunities for the people of Thoothukudi.
2. Most of the examination center and interviews are located in Mumbai and Delhi. As a result, the people in Tamil Nadu and Thoothukudi are getting affected. Hence, the employment information centres and examination centre may be located in Chennai and Thoothukudi.
3. In most of the central government offices, the outside people are deployed. Hence, it is requested to give priority for the people from Thoothukudi.
4. Even the security guard working at the central government offices in Thoothukudi are from other states, so communicating with them in Tamil language is very difficult. Hence, it is requested to give priority for people from Thoothukudi.

**12. Thiru. Jessiah Villavarayar – Thoothukudi (President, Tuticorin Stevedores Association & Vice President, All India Trade Union):**

1. The port of Colombo is getting developed with the revenue generated through Indian cargo.
2. We have adequate land bank and facilities.
3. This project should be implemented. Due to this project, we will have control over foreign exchange and we can do import/export business more efficiently.
4. This is a good project and we are already late.
5. After fulfilling the opinions and views of public, the scheme should be implemented. I welcome and support this project.

**13. Thiru. Kodeeswaran, President, Indian Trade Union:**

- The change is inevitable and this project will lead to progress and development.
- This project came as a result of efforts taken by many associations for the past 25 years.
- This project will create a developmental path for the southern districts.

- It is requested to consider the views and opinions of the public before implement this project.
- I welcome this project.

**District Environmental Engineer, Thoothukudi**

1. The District Environmental Engineer concluded the meeting by thanking all those who attended the public hearing and informed that the recordings will be forwarded to the State level Environmental Impact Assessment Authority through Tamil Nadu Pollution Control Board.
2. During the public hearing proceedings, no representation has been received in writing from the general public in favor or against this project. (Annexure – III).

**The following documents are enclosed herewith in connection with the public hearing:**

1. Pen drive consisting of the Recorded Video (2-Nos) of the entire public hearing proceedings (Annexure – I).
2. List of participants who attended the public hearing (Annexure – II).
3. Written views/comments received for this project (Annexure – III).

05/11/2024
District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Thoothukudi.

5/11/24
District Revenue Officer,
Thoothukudi District.

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தாலுகா, முள்ளக்காடு கிராமத்தில் அமையவுள்ள முன்மொழியப்பட்ட திட்டமான தி/ள். வ.உ.சி துறைமுக ஆணையத்தால் முன்மொழியப்பட்ட திட்டமான துறைமுக வளாகத்தில் கொள்கலன் முனையம், கடலில் தோண்டுதல் மற்றும் அலைதாங்கி வசதியுடன் கப்பல் தளம் (வெளிப்புறம்) 1-லிருந்து 4-வரை DBFOT அடிப்படையில் உருவாக்குதல் என்ற திட்டத்திற்கு 03.09.2024 காலை 11.00 மணிக்கு தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தாலுகா, முள்ளக்காடு கிராமத்தில் மரியா மஹாலில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்ட நடவடிக்கை பற்றிய விவரங்கள்:

**பங்கேற்றவர்கள்:-**

| | | |
|---|---|---|
| 1. | திரு. C.அஜய் சீனிவாசன் | மாவட்ட வருவாய் அலுவலர், தூத்துக்குடி. |
| 2. | திருமதி. சு.வ. கலைவாணி | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி. |
| 3. | தொழிற்திட்ட உரிமையாளர்கள் மற்றும் அவரது பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | வருகை பதிவேட்டின் படி, (வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) இணைப்பு - II |

முதலாவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி அவர்கள் இந்த கூட்டத்தை தலைமை ஏற்று நடத்த வருகை தந்த மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர், தூத்துக்குடி அவர்களையும், இத்தொழிற்திட்டத்தின் உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகளையும் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்த அனைத்து பொதுமக்களையும் வரவேற்று இந்த கூட்டம் நடை பெறவுள்ளதின் நோக்கத்தையும் இந்த திட்டம் பற்றியும் எடுத்துரைத்தார். அதன் பின்பு இந்ததிட்டம் பற்றி தொழிற்சாலையின் சார்பாக தொழில் நுட்ப விளக்கங்கள் மற்றும் எதிர்ப்பார்க்கப்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கப்பட்டது. பின்பு பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

**I.இந்த கூட்டத்தில் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பின்வருமாறு:**

**1.திரு. செ.மா.சந்தனராஜ், மாவட்ட பொறுப்பாளர், தமிழர் விடியல் கட்சி, முத்தையாபுரம், தூத்துக்குடி**

- ❖ இங்கு கலந்து கொண்ட அதிகாரிகளின் பெயர்கள் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன்.
- ❖ இந்த கருத்துக்கேட்பு கூட்டமானது மக்களுக்கான கூட்டமா? அல்லது துறைமுக அதிகாரிகள், பணியாளர்களுக்கான மற்றும் வணிக பிரதிநிதிகளுக்கான கூட்டமா? என்று சந்தேகம் உள்ளது. இதனை, தெளிவுபடுத்தவும்.
- ❖ நான் ஒரு சாதாரண மனிதர். எனது வீடு இப்பகுதியில் தான் உள்ளது. நான் ஒரு சமூக ஆர்வலர். நானும் இந்திய குடிமகன். நானும் வரி செலுத்துகிறேன்.
- ❖ இந்த கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெறுவதே எனக்கு தெரியாது. தகவல் அறிந்து நான் தூத்துக்குடியிலிருந்து வருகிறேன்.

- இதில் கலந்து கொண்ட மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் மக்களுக்கு இக்கூட்டம் நடைபெறுவதை பற்றி தகவல் தெரிவிக்கப்பட்டதா என தெளிவுபடுத்த வேண்டும்.

- இது துறைமுகத்தின் வளர்ச்சித்திட்டமா? அல்லது துறைமுகத்தின் வழி மக்களுக்கு வளர்ச்சித் திட்டமா என் தெளிவுபடுத்த வேண்டுகிறேன். செய்திதாள்களில் வெளியிடப்படவில்லை, முகநூல் பக்கங்கள் மற்றும் Whatsapp-லிலும் வரவில்லை. இன்று இந்த கருத்துக்கேட்பு கூட்டம் பற்றி மக்களுக்கு தகவல் கொடுத்தீர்களா? அல்லது அறிவிப்பு தாள்கள் கொடுத்துள்ளீர்களா? தாங்கள் ஒரு அதிகாரி தாங்கள் எங்களுக்கு சரியான விளக்கமளிக்க வேண்டுகிறேன்.

- எனது முத்தையாபுரம் பகுதியில் எந்தவித ஆட்டோ விளம்பரங்களும் கொடுக்கப்படவில்லை. ஆகையால் மாசு கட்டுப்பாடு வாரியம் தங்களது கடமையை சரியாக செய்யவில்லை என்பதே திரு. ரோமல்ட் அவர்களது கருத்தாக உள்ளது.

- இதுபோன்ற திட்டங்களால் கடற்கரை பகுதிகள் அதிக பாதிப்பு அடைகிறது. சாகர் மாலா திட்டத்தினால் கடற்கரை அதிக மாசுபாடு அடைகிறது என்பது பற்றி மீனவ மக்கள் அதிக முறை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் தெரிவித்தும் அது பற்றி சரியான தகவல் இதுவரை கொடுக்கப்படவில்லை.

- மேலும், முத்தையாபுரத்தில் நடைபெற்று வரும் இக்கூட்டத்தில் இப்பகுதி பொது மக்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை ஏனெனில் இப்பகுதியில் எந்தவித விளம்பரங்களும் செய்யப்படவில்லை அறிவிப்பு பலகைகள் வைக்கப்படவில்லை.

- மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் மக்களிடம் சரியான அணுகுமுறையில்லாததே ஸ்டெர்லைட் போன்ற பிரச்சனைகள் வர காரணமாக அமைந்தது.

- M/s. TAC- ல் அமோனியா வாயுக்கசிவினால் 21 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார், அக்குடும்பம் தத்தளிக்கின்றது, ஏனெனில் மாசு கட்டுப்பாடு வாரியம் சரியான விதத்தில் தொழிற்சாலைகளை அணுகுவதில்லை.

- தி/ள். ஸ்பிக் நிறுவனத்திலிருந்து அதிக அளவு புகையானது வெளியாகிறது. இரவு 1.30 மணிக்கு மேல் அமோனியா வாயு வெளியேற்றப்படுகிறது. ஊர் மக்கள் இது பற்றி அந்நிறுவனத்திடம் பேசினால் நீங்கள் வேண்டுமானால் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறுங்கள் என்று கூறுகின்றார்கள். குறிப்பாக சூசைநகர், தங்கம்மாள்புரம் மற்றும் சண்முகபுரம் மக்கள் அந்நிறுவனத்திடம் முறையிட்டதற்கு அந்நிறுவனத்தின் PRO, மேலாளர் அவர்கள் அப்படிதான் புகைவரும் என கூறுகிறார்கள். இதிலிருந்து தொழிற்சாலைகளின் மாசு கட்டுப்பாடு தெரிகிறது.

- மாசு கட்டுப்பாடு வாரியம் சரியாக செயல்பட்டால் M/s. TAC-ல் அமோனியா வாயுக்கசிவினால் 21 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்திருக்கமாட்டார், பணம் கொடுத்து இழப்பை சரி செய்ய முடியாது, நீதி கிடைக்கவில்லை. உயிரிழந்த குடும்பத்தினருக்கு ரூ.25 லட்சம் கொடுத்துவிட்டால் பிரச்சனைகள் முடிவதில்லை, அப்பணத்தை நாங்கள் பிச்சை எடுத்து கூட கொடுத்துவிடுவோம்.

❖ மாசு கட்டுப்பாடு வாரியம் ஸ்டெர்லைட் பிரச்சனையிலிருந்து இன்று வரை சரியாக அணுகுமுறையில்லை ஆகவே தான் 13 உயிர்கள் பரிகொடுக்கப்பட்டது.

❖ இதே போன்று தான் தி/ள். நிலா சீ∴புட்ஸ் நிறுவனத்திலிருந்து அமோனியா வாயு கசிவு ஏற்பட்டு 30 பேர் பாதிக்கப்பட்டார்கள், சென்னையில் கோரமண்டல் நிறுவனத்தால் பாதிக்கப்பட்டு 40 நபர்கள் பாதிக்கப்பட்டனர்.

❖ இக்கூட்டத்தில் இருக்கும் அதிகாரிகள் யாரும் தவறாக நினைத்துக் கொள்ள வேண்டாம் துறைமுகம் தங்களது இத்திட்டங்களை பொது மக்கள் கருத்தை கேட்க நடத்தவில்லையெனில் அவர்களது Port Trust-ல் வைத்து நடத்த வேண்டுகிறேன்.

❖ இதே துறைமுகத்தில் நான் முன்னால் மேற்பார்வையாளராக பணியாற்றியுள்ளேன். மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் துறைமுகம் கொண்டுவந்த 110 கோடி மதிப்புள்ள திட்டத்தின் தவறை குறித்து நான் கேள்வி எழுப்பியதால் தற்காலிக பணியிலிருந்த என்னை துறைமுகம் மூன்றாவது நாளில் பணி நீக்கம் செய்தனர்.

❖ சாமானியனின் குரல் எங்கும் பிரதிபலிக்க முடியவில்லை. தற்போது நான் அந்த பணியில் இல்லை.

❖ கேள்வி கேட்பது எங்கள் ஜனநாயக கடமை, அதற்கு அதிகாரிகள் கண்டிப்பாக பதில் கூற வேண்டும். நாங்கள் வாழ வேண்டும்.

❖ மீனவ மக்கள் பாதிக்கும் எந்த திட்டமும் எங்களுக்கு வேண்டாம். மக்கள் வாழவே அரசாங்கத்தால் திட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன, மக்கள் சாவதற்கு திட்டங்கள் தேவையில்லை.

❖ துறைமுகத்தால் வணிகர்கள் மற்றும் பணியாளர்கள் நன்மை அவசியம் தான் ஆனால் சுற்றுச்சூழல் பாதிப்படையாமலிருக்கும் திட்டங்களை நாங்கள் வரவேற்கிறோம், இல்லையென்றால் ஸ்டெர்லைட் பிரச்சனைகள் போன்றே ஒவ்வொரு திட்டத்திற்கும் நடைபெறும்.

❖ M/s. TAC-ல் நடைபெற்ற பிரச்சனை நாளை தி/ள். ஸ்பிக் நிறுவனத்தில் ஏற்படாது என்பதற்கு என்ன நிச்சயம், அதிகாரிகள் இதனை தெளிவுபடுத்தவும்.

❖ இது கருத்துக்கேட்பு கூட்டம் அல்ல துறைமுகம் கூறும் கருத்துக்களை கேட்கும் கூட்டமாக நான் கருதுகிறேன். நபர் 2-ன் கருத்திற்கு நான் ஆதரவு தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

- மாவட்ட வருவாய் அலுவலர்: இக்கருத்துக் கேட்பு கூட்டம் பற்றி 23.07.2024 அன்று நாளிதழில் 03.09.2024 கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறவிருக்கிறது என்று தகவல் வெளியிடப்பட்டுள்ளது மேலும் இதன் நகலினை தங்களுக்கு அளிக்க சொல்கிறேன் என்று கூறினார். மேலும், இது குறித்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் இக்கூட்டம் குறித்து அறிவிப்பு தாள்கள், செய்தித்தாள்கள் மற்றும் ஆட்டோ விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இது பொது மக்களின் கருத்துக் கேட்பு கூட்டம் ஆதலால் தாங்கள் தங்களின் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் தலைமை பொறியாளர், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் அவர்கள் விளக்கமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

- **தலைமை பொறியாளர், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்:**

  இக்கருத்துக் கேட்பு கூட்டம் பற்றி 23.07.2024 அன்று தினத்தந்தி நாளிதழில் 03.09.2024 கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறவிருக்கிற என்று விளம்பரங்கள் கொடுத்துள்ளோம். அதிக இடங்களில் விளம்பர பலகைகள், அதிக இடங்களில் அறிவிப்புதாள்கள் கொடுத்துள்ளோம் மற்றும் அதிக இடங்களில் ஆட்டோ விளம்பரங்கள் செய்துள்ளோம்.

**2. திரு. ரோமல்ட், பூபாலராயபுரம், கோரமண்டலம் நற்பணி செயற்குழு உறுப்பினர்.**

- ❖ எங்கள் பகுதிகளில் தங்களது ஆட்டோ விளம்பரங்கள் செய்யப்படவில்லை.
- ❖ பூபாலராயபுரம், திரேஸ்புரம் மற்றும் இனிகோ நகர் பகுதிகளில் தான் 99 சதவீத மீனவ மக்கள் அதிகம் வசிக்கின்றனர். ஆனால், இந்த பகுதிகளில் எந்தவித விளம்பரங்களும் செய்யப்படவில்லை.
- ❖ இத்திட்டத்தினால் பாதிப்படைவது மீனவ மக்களே, ஆனால் மீனவ மக்கள் வசிக்கும் பகுதிக்கு துறைமுகம் சார்பாக எவ்வித விளம்பரங்களும் செய்யாமல் வேறு இடங்களில் விளம்பரங்கள் செய்து அதற்கு கணக்கு காட்டுகிறீர்கள். இதற்கு மேடையில் அமர்ந்திருக்கும் நீதி அரசர்களான மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் பதில் கூற வேண்டும்.
- ❖ ஏனெனில், இத்திட்டம் குறித்து முக்கியமாக அறிய வேண்டியது மீனவ மக்கள் மட்டுமே, கடலில் செய்யப்படும் எந்தவொரு திட்டமும் முதலில் மீனவ மக்களையே பாதிக்கும்.
- ❖ ஏற்கனவே இதுபோன்றே தி/ள். ஸ்டெர்லைட் பிரச்சனையில் அதிக அளவு மீனவ மக்களையே பாதித்தது, ஆகையால் அப்பிரச்சனைக்கு மீனவ மக்களே அதிக அளவு போராட்டத்தில் கலந்து கொண்டனர். அதில் 13 உயிர்களை நாங்கள் இழந்துள்ளோம். இங்கு வசிக்கும் மக்கள் இரத்தம் சிந்தியுள்ளனர். நீங்கள் இது போன்ற திட்டங்களை கண்மூடித்தனமாக கொண்டுவந்துள்ளீர்கள்.

**3.திரு. சிவகணேசன், சண்முகபுரம், தூத்துக்குடி.**

- ❖ நான் தூத்துக்குடி சண்முகபுரத்திலிருந்து வருகிறேன். எங்கள் பகுதியில் ஆட்டோ விளம்பரங்கள் செய்யப்பட்டது. நான் அதனை கண்டேன்.

**4. திரு. செல்வகுமார், பொதுச்செயலாளர் தூத்துக்குடி கோரமண்டலம் சமூக நற்பணி மன்றம்.**

- ❖ எங்களது நற்பணி மன்றம் கடலோர மக்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு போன்ற நலனினை செய்து வருகிறது.
- ❖ எந்தவொரு திட்டத்திலும் வாழ்வாதாரங்களை இழக்கக்கூடிய ஒரு சமூகத்தினர் இருக்கத்தான் செய்வார்கள்.
- ❖ கடற்கரை பகுதியை சார்ந்த மக்கள் மட்டுமல்ல, தோணித் தொழில், படகுத் தொழில், விசைப்படகு மீனவர்கள் பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு இது கேள்வி குறியாக அமையும். இருப்பினும் இத்திட்டம் பற்றி எதிர்ப்புகள் வந்தாலும் நாட்டின் முன்னேற்றம் மற்றும் மக்களின் முன்னேற்றம் மற்ற நாடுகளுடன் தொழில் வர்த்தகத்தின் முன்னேற்றம் இதனை கட்டாயம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் மக்கள் துறைமுகத்தின் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் வாழ்வாதாரமும் இதில் உள்ளது. எனவே, இத்திட்டத்தை சில நிபந்தனைகளுடன் நாங்கள் ஆதரிக்க முடிவு செய்துள்ளோம். அந்த நிபந்தனை என்னவென்றால், இத்திட்டத்தில்

பங்கேற்றுவுள்ள பன்னாட்டு நிறுவனங்கள், MNC நிறுவனங்கள், Corporate Company அனைவரும் இத்திட்டத்தின் மதிப்பீடு மிக குறைவு என எதிர்ப்பு தெரிவித்தனர். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.8,500 கோடி என கூறப்பட்டாலும், இத்திட்டம் முடியும் தருவாயில் இதன் மதிப்பீடு ரூ.13,000 கோடியாக உயர வாய்ப்புள்ளது. இதனை செய்து முடிக்கும் போது அவர்களுக்கு ஏற்படும் செலவு அதிகமாகலாம், எனவே வையபிலிட்டி கேப்.'. பண்டிங் (விஜிஎ.ப்) என்பதனை மத்திய அரசு இத்திட்டத்தினை நிறைவேற்றுபவர்களுக்கு பண மதிப்பு இழப்பீடு இடைவெளியை சரிசெய்ய வழங்குகிறது. மேலும், இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் MNC நிறுவனங்கள் இதனை நம்பி வாழ்வாதாரத்தை இழக்கும் Corporate நிறுவனங்கள் போல் விசைப்படகு, நாட்டுப்படகு, தோணி மற்றும் பாரம்பரிய மீன்படி தொழில் செய்யும் மக்களுக்கு தங்கள் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள MNC நிறுவனங்களுக்கு எந்த அளவு இழப்பீடு கொடுக்கிறீர்களோ அதில் பாதி அளவு VGF-ன் 50% CSR செயல்பாட்டின் வழி பிரத்யேக மீனவ மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனைகளோடு இத்திட்டத்தை ஆதரிக்கிறோம்.

5.திரு. <u>M.மாரியப்பன், சுனாமி காலனி மீனவர் கூட்டணி தலைவர்:</u>

- கடல் அரிப்பு ஏதும் இல்லை என்று தலைமை பொறியாளர் கூறினார், ஆனால், தற்போது நான்கு ஐந்து வருடத்திற்கு முன் நிறுவப்பட்ட கற்கள் கூட கடல் அரிப்பால் உள்ளே இழுத்து செல்லப்படுகிறது. Water Tank-ல் இருந்து முள்ளக்காடு பகுதிகள் வரை கற்கள் இல்லை அதற்கு என்ன கூறபோகிறார்கள். இன்னும் பத்து, இருபது ஆண்டுகளில் கடற்கரையே இல்லாமல் போகிவிடும். அங்கு வசிக்கும் மீனவ மக்களுக்கும், மீன்படி தொழிலுக்கும் பாதுகாப்பு ஏற்படுகள் செய்து தர வேண்டும். அதுமட்டுமின்றி துறைமுகத்திற்கு தேவையான ஆழம் தோண்டும் போது கடலில் இருந்து எடுக்கப்படும் கல், மண்ணை என்ன செய்யப்போகிறார்கள். ஏற்கனவே இதுபோன்ற திட்டத்தால் அங்குள்ள பவள பாறைகள் அனைத்தையும் அழித்துவிட்டனர். இது போன்ற திட்டங்களால் கடல்வளம் மற்றும் கட்றகரை மக்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படுகிறது. இதற்கு பதில் கூற வேண்டும். கடந்த முறை இதேபோல் கடலிலிருந்து எடுக்கப்பட்ட கல், மண் போன்றவற்றை கரைப்பகுதியில் கொட்டியதால் எங்கள் வலைகள் மிகவும் சேதமடைந்துள்ளது.

  - <u>தலைமை பொறியாளர், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்:</u>

    1. இதனால் கிடைக்கப்பெறும் கல் மற்றும் மண் போன்றவைகளை கடலில் கொட்டாமல் துறைமுகத்தின் உள்ளேயே பயன்படுத்தப்படும் என்பதால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

    2. மணல் அரிப்பு ஏற்படாது என்று ஆராய்ந்து அறிக்கை அளித்த பின்னரே இத்திட்டத்தை செய்கிறோம். ஆய்வு அறிக்கையின் படி இதுவரை அந்த பகுதியில் கடல் அரிப்பு ஏற்படவில்லை என்பதால் இத்திட்டத்தை கொண்டுவருகிறோம்.

    3. கப்பல் செல்லும் பாதையில் தாங்கள் வலைகளை போடுவதால் பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் துறைமுகத்தால் கப்பல் செல்லும் பாதைகள் தோண்டும் போது முன்னதாகவே அறிவிப்பு செய்யப்படுகிறது. ஆக கப்பலும் சேதம் ஏற்படுகிறது, எனினும் இனிவரும் காலங்களில் கப்பல் செல்லும் பாதைகள் தோண்டும் போது தங்களுக்கு முன்கூட்டியே அறிப்பு செய்கிறோம். தாங்கள் அதற்கேற்ப முன்னேற்பாடுகள் நடவடிக்கை எடுக்க ஏதுவாக அமையும்.

4. மேலும் நாங்கள் தோண்டும் போது கிடைக்கும் மண் மற்றும் கல் போன்ற பொருட்களை இனி வெளியில் கொட்டமாட்டோம். அதனை பைப் லைன் மூலமாக துறைமுகத்திற்கு உள்ளேயே பயன்படுத்தி கொள்ள திட்டமிட்டுள்ளோம். ஆதலா எவ்விதமான அச்சமும் தங்களுக்கு வேண்டாம்.

**6. திரு. ரோமல்ட், பூபாலராயபுரம், கோரமண்டல சமூக நற்பணி செயற்குழு உறுப்பினர்.**

- ❖ இத்திட்டம் குறித்த எந்தவொரு சிறுபுத்தகம் வழங்கப்படவில்லை என்பது வருத்தமளிக்கின்றது.
- ❖ இந்த கருத்துக்கேட்பு கூட்டம் முடிவடைந்ததும் இது கடந்துவிடும் ஆகையால் இத்திட்டம் குறித்த பயன் மற்றும் பாதிப்புகள் பற்றி எங்களுக்கு சிறு புத்தகம் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஏனெனில், இத்திட்டங்கள் பற்றிய விபரங்களை பாமர மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதை அதிகாரிகள் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் இத்திட்டம் பற்றி ஒரு நண்பர் கூறுகையில் சண்முகபுரத்திற்கு அறிவிப்புகள் செய்யப்பட்டதாக கூறினார். ஆனால் அப்பகுதியில் மிக குறைந்த அளவு மீனவ மக்களே வசிக்கின்றனர். மேலும் தின நாளிதழில் இது குறித்த செய்திகளை மிக முக்கியமாக கருதப்பட வேண்டும். மேலும் மீனவ மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது கப்பல் வந்தடையும் போது அங்குள்ள சிறு மீன்பிடி தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. மீனவர்களுக்கு ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டால் துறைமுகத்தால் ஆங்காங்கே தொடர்பு கொள்ளும் பலகைகள் வைக்கப்பட வேண்டும். மீனவர்களின் கருத்துக்களை தெரிவிக்க மின்னஞ்சல் முகவரி தெரிவிக்கப்பட வேண்டும். இந்த குறைந்தபட்ச வசதிகள் கூட துறைமுகம் சார்பில் இல்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்துடன் பதிவு செய்கிறேன்.
- ❖ துறைமுக அதிகாரிகள் இனிவரும் காலங்களிலாவது இதனை ஏற்பாடு செய்ய வேண்டும்.
- ❖ திரு. செ.மா.சந்தனராஜ், சொன்னது போல் உயிரிழந்த குடும்பத்தினருக்கு ரூ.25 லட்சத்தை கொடுத்துவிட்டால் பிரச்சனைகள் முடிவதில்லை, அப்பணத்தை நாங்கள் பிச்சை எடுத்து கூட கொடுத்துவிடுவோம், ஆகையால் போதுமான பாதுகாப்பு வசதிகள் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
- ❖ இது போன்ற திட்டங்களால் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறுகிறீர்கள், ஆனால் தற்போது துறைமுகத்தில் எத்தனை நிரந்தர ஊழியர்கள் உள்ளார்கள் கூறுங்கள். அதிகபட்சம் 200 குறைவான தொழிலாளர்கள் மட்டுமே உள்ளனர்.
- ❖ கடந்த 20 வருடங்களுக்கு முன்பு 2000 தொழிலாளர்கள் இருந்தனர் ஆனால் தற்போது 300 தொழிலாளர்கள் கூட இல்லை.
- ❖ வேலைவாய்ப்பை ஏற்படுத்துவது தவறில்லை அதே நேரத்தில் மீனவ சமுதாயத்திற்கு பாதிப்பு ஏற்படாமல் செய்யுங்கள்.
- ❖ கண்காணிப்பு ஏற்படுகள் கண்டிப்பாக அமைக்க வேண்டும், பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக தொடர்பு கொள்ள அதனுடைய விளம்பர பலகைகள் திரேஸ்புரம், இனிகோநகர், லூர்தம்மாள்புரம், மேட்டுப்பட்டி, அலங்காரதட்டு போன்ற இடங்களில் வைத்திட வேண்டும், பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி.

**7. திரு. சுரேஷ் CITU மாவட்ட குழு.**

- ❖ தலைமை பொறியாளர் அழகாக கூறினார். ஆனால் எனக்கு முன்பு பேசிய தோழர் சொன்னது போல எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருந்தாலும், நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு? நமது வளர்ச்சி தொழில் வளர்ச்சி மட்டுமல்ல, பணியாளர்களின் வளர்ச்சியும் தான்.

- ❖ இப்பகுதியில் படித்த இளைஞர்கள் அதிகம் உள்ளனர் அவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கிடைக்கவேண்டும். நிரந்தர வேலையை யார் செய்ய வேண்டும் என்பதை ஒப்பந்தம் மூலம் செய்வதை எங்கள் தொழிற்சங்கம் அனுமதிக்காது.
- ❖ சுற்றுச்சூழலை பாதிக்காத வண்ணம் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.
- ❖ திரேஸ்புரம், சூசை நகர், சுனாமி காலனி, அலங்காரதட்டு போன்ற பகுதிகளில் வசிக்கும் மீனவ மக்களை பாதிக்காதவாறு இத்திட்டம் அமைய வேண்டும்.
- ❖ சேதுசமுத்திர திட்டத்தோடு இதனை இணைத்தால் கிழக்கு கடற்கரை துறைமுகங்களோடு இணைப்பு ஏற்படுத்த இத்திட்டம் வெற்றியடையும் என எங்கள் தொழிற்சங்கம் கருதுகிறது.
- ❖ இந்த நிபந்தனைகளோடு இத்திட்டத்தை ஏற்றுக்கொள்கிறோம்.

8. <u>திரு. சிவகணேசன், சண்முகபுரம்.</u>

- ❖ ஆரம்ப காலத்தில் துறைமுகம் தோன்றியதே எதிர்ப்புகளுடன் தான் தொடங்கப்பட்டது.
- ❖ தற்போது துறைமுகத்தில் இன்று நூற்றுகணக்கான மீன்படி படகுகள் உள்ளது. அன்றைய நேரத்தில் ஒரு பத்து படகுகள் மட்டுமே இருந்தது.
- ❖ எனவே மீனவ மக்களுக்கு பாதிப்பு இல்லாமல் திட்டத்தினை ஏற்படுத்த வேண்டும்.
- ❖ பாதுகாப்பு ஏற்பாடுகளை கருத்தில் கொண்டு இத்திட்டத்தனை செய்ய வேண்டும்.

<u>9. திரு. ஜெயந்த், முத்தையாபுரம்.</u>

- ❖ நான் ஒரு கப்பல் கொள்கலன் தனியார் நிறுவனத்தில் 25 வருடமாக பணிபுரிந்து வருகிறேன்.
- ❖ இத்திட்டம் அவுட்டர் ஹார்பர் கண்டெய்னர் டெர்மினல் என்பதால், மாசு ஏற்படாது.
- ❖ இப்போதெல்லாம், கப்பல்கள் கந்தக எரிபொருளைப் பயன்படுத்தத் தொடங்கின.
- ❖ மிகக் குறைந்த தூசி உள்ளது. கடந்த 26 ஆண்டுகளில் 1000 கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ❖ வேலைவாய்ப்பு உருவாக்கம் என்பது கார்ப்பரேட் துறையில் மட்டுமல்ல, கப்பல் முகவர்கள், சரக்கு கையாளும் முகவர்கள், சுங்க தரகர் முகவர்கள், கொள்கலன் முனையங்கள், பழுதுபார்க்கும் பணிகள், காலியான கொள்கலன் யார்டுகள், ஸ்டஃபிங் மற்றும் டி-ஸ்டஃபிங் நடவடிக்கைகள், டிரக் டிரைவர்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் உள்ளிட்ட பல சிறு தொழில்கள். இதன் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் 10,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.
- ❖ தூத்துக்குடி கண்டெய்னர் டெர்மினல்களில் பயிற்சி பெற்றவர்கள் இப்போது மத்திய கிழக்கு மற்றும் துபாயில் பணிபுரிகின்றனர், ஏனெனில் இந்த டெர்மினல்கள் வழங்கிய மதிப்புமிக்க பயிற்சிகள்.
- ❖ தூத்துக்குடி இளைஞர்கள் கப்பல் கேப்டனாகவும், தலைமைப் பொறியாளராகவும் சர்வதேச அளவில் புகழ் பெற்றுள்ளனர்.தூத்துக்குடி

துறைமுகத்தின் அதிகபட்ச வரைவு 14.2 மீ, இருப்பினும், எங்களிடமிருந்து 200 கி.மீ தொலைவில் உள்ள விழிஞ்யம் துறைமுகத்தின் வரைவு 18 மீ. ஒரு மீட்டர் வரைவு மாறுபாடு 2000 கொள்கலன்கள் முதல் 3000 கொள்கலன்கள் வரை நமது சரக்குகளுக்கு வழிவகுக்கும். அதன்ப இந்த சரக்குகளை நம்பியிருக்கும் தொழில்கள் மற்றும் அதன் வேலைவாய்ப்பு பாதிக்கப்படும். மாதத்திற்கு 20,000 கொள்கலன்களின் தற்போதைய ஏற்றுமதி பங்களிப்பு குறையும்.

- இந்த வெளி துறைமுகத் திட்டம், கொள்கலன் கையாளும் திறனை 5 மடங்கு அதிகரிக்கும். ஒரு மீட்டர் வரைவு அதிகரிப்பு, ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் அமைப்புசாராத் துறையில் உள்ள 1000 குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்.

- எனது நிறுவனத்தில், 2000-ம் ஆண்டில் 15 முதல் 20 பணியாளர்கள் மட்டுமே இருந்தோம், தற்போது 80 முதல் 90 பணியாளர்களுடன் வளர்ந்துள்ளோம், ஏனெனில் தூத்துக்குடி துறைமுகத்தை நம்பியே தொழில்துறை வளர்ச்சி அடைந்துள்ளது. இந்தியத் துறைமுகத்தில் உள்ள உள்கட்டமைப்பை கொழும்பு துறைமுகத்துடன் ஒப்பிடுகையில், 20 ஆண்டுகளுக்கு முன்பு, எங்கள் வரைவு 11 மீ ஆகவும், கொழும்பு வரைவு 14 மீ ஆகவும் இருந்தது.

- இப்போது அவர்களின் வரைவு 18 மீ மற்றும் எங்களுடையது 14 மட்டுமே. மேலும் கொழும்பு அவர்களின் வரைவை 21 மீட்டராக அதிகரிக்க திட்டமிட்டுள்ளது. இருப்பினும், 16 மீட்டராக அதிகரிக்க நாங்கள் போராடி வருகிறோம். மேலும், அரசாங்கத்தின் கடல்சார் இந்தியா விஷன் 2030, அனைத்து 12 பெரிய துறைமுகங்களும் குறைந்தபட்சம் 16.5 மீ வரைவுகளை உருவாக்க வேண்டும் என்று கூறுகிறது.

- துரதிர்ஷ்டவசமாக, தற்போதைய உள் துறைமுகத்திற்கு 14.5 மீட்டருக்கு மேல் வரைவை அதிகரிக்கும் திறன் இல்லை, அதனால்தான் தற்போதைய அவுட்டர் ஹார்பர் திட்டத்திற்கு செல்கிறோம்.

- தூத்துக்குடி மற்றும் அதைச் சுற்றியுள்ள நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய தூத்துக்குடியில் உள்ள கல்லூரிகளை அணுகுகின்றன. துறைமுகம், விமான நிலையம், ரயில் இணைப்பு போன்ற பிற உள்கட்டமைப்புகள் காரணமாக தூத்துக்குடியில் பல தூய்மையான தொழில்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தின.

- நாங்கள் ஏற்கனவே 20 ஆண்டுகள் தாமதமாகிவிட்டோம்.

10. <u>திரு. லினோ, தூத்துக்குடி மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்சங்கம்:</u>

- எங்கள் அமைப்பு துடிசியா, இது 33 ஆண்டுகள் பழமையானது, இது தூத்துக்குடியின் குறு மற்றும் சிறு தொழில்களை ஆதரிக்கிறது மற்றும் ஊக்குவிக்கிறது. இந்த திட்டத்தை வரவேற்கிறோம். துறைமுகம் இல்லாமல் வளர்ச்சிகள் இல்லை. துறைமுகம் காரணமாகவே தான் தூத்துக்குடியில் தொழில் வளர்ச்சி ஏற்படுகிறது. வெளி துறைமுக திட்டத்திற்கு நாங்கள் எங்கள் ஆதரவை வழங்குகிறோம் அதே நேரத்தில் மீனவர்களின் வழிதடங்கள் மற்றும் மீன்பிடி ஆதாரங்கள் பாதிப்பு ஏற்படாதவாறு அமைக்க, நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

- தூத்துக்குடி மக்களுக்கு அதிக வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தர வேண்டும் என்று உறுதிப்படுத்த வேண்டும்.

11. திரு. சம்சுதீன், தூத்துக்குடி இஸ்லாமிய கூட்டமைப்பு ஒருங்கமைப்பாளர்.

❖ தூத்துக்குடியிலுள்ள பல நிறுவனங்கள் மற்றும் மத்திய மற்றும் மாநில அரசு அலுவலகங்களில் தூத்துக்குடி மக்களுக்கு வேலைவாய்ப்பு பெரிதளவில் கொடுக்கப்படவில்லை.

❖ வெளியூர்களைச் சேர்ந்தவர்கள் பணிபுரிகின்றனர். தூத்துக்குடி மக்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும்.

❖ தூத்துக்குடியில் அமைக்கப்படும் தொழிற்சாலைகள், தூத்துக்குடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

❖ பெரும்பாலான தேர்வு மையங்கள் / நேர்காணல்கள் மும்பை மற்றும் டெல்லியில் அமைந்துள்ளன. எனவே, தமிழக மக்கள் மற்றும் தூத்துக்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனா், ஆகையால் தேர்வுமையம் சென்னை மற்றும் தூத்துக்குடியில் அமைக்கப்பட வேண்டும்.

❖ மத்திய மற்றும் மாநில அரசு அலுவலக வாசலில் பணிபுரியும் பாதுகாவலா் கூட வேறு மாநிலத்தை சேர்ந்தவராக உள்ளாா்கள், ஆகையால் உள்ளே செல்ல கூட மிகவும் சிரமமாக உள்ளது. எனவே தூத்துக்குடி மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

12. திரு. ஜெசியாவில்லவராயர், தூத்துக்குடி - (ஸ்டீவ்டோர்ஸ் அசோசியேட் - **Stevedors Assosiation**) கப்பலில் சரக்கு ஏற்றி இறக்குபவா் நலச்சங்கத் தலைவா் மற்றும் அகில இந்திய தொழிற்சங்கத்தின் துணைத்தலைவா்:

❖ இந்திய சரக்கு மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு கொழும்பு துறைமுகம் வளர்ச்சியடைந்து வருகிறது.

❖ நம்மிடம் போதுமான நில வங்கி உள்ளது.

❖ இது ஒரு நல்ல திட்டம்.

❖ அந்நியச் செலாவணியை இழக்கிறோம்.

❖ நாங்கள் ஏற்கனவே தாமதமாகிவிட்டோம்.

❖ நிபந்தனைகளை நிவர்த்தி செய்த பின், இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும். இத்திட்டத்தை வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன்.

13. திரு. கோடீஸ்வரன். தலைவா், இந்திய வியாபார தொழிற்சங்கம்:

❖ மாற்றம் தவிர்க்க முடியாதது.

❖ இந்த திட்டம் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

❖ கடந்த 25 ஆண்டுகளாக பல சங்கங்கள் எடுத்த முயற்சி இது.

❖ இந்த திட்டத்தினால் தென் மாவட்டமே நல்ல வளா்ச்சி பாதையை அடையும்.

❖ மக்களின் கருத்துக்களை கேட்டு பின் இத்திட்டத்தினை செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

❖ இந்த திட்டத்தை வரவேற்கிறேன்.

**II. <u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் நிறைவுரை</u>**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்களுடைய கருத்துக்கள் அனைத்தும் உள்ள படியே பதிவு செய்யப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பா வாரிய தலைமை அலுவலகம் வாயிலாக மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்து வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

**III.** இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து இந்த திட்டம் அமைவது தொடர்பான எழுத்து பூர்வமாக மனுக்கள் எதுவும் பெறப்பட்டவில்லை.

**<u>பொது மக்கள் கருத்துகேட்பு கூட்ட நடவடிக்கையுடன் கீழ்கண்ட ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**

1. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட காணொளி அடங்கிய குறும்பதிவி (எண்ணம் -2) இணைப்பு I-ல் இணைக்கப்பட்டுள்ளது.
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்றவர்கள் பற்றிய விபரம் இணைப்பு II-ல் இணைக்கப்பட்டுள்ளது.

05/11/2024

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
தூத்துக்குடி.

5/11/24

மாவட்ட வருவாய் அலுவலர்,
தூத்துக்குடி.